[1968 ஆகஸ்ட் 31

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) இந்த வினுவிற்கு இடமில்லை.

*181 வினு—**திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்ப பாரா—

(அ) மீனவர்களுக்கு பயிற்சியளிக்கும் நிலையங்கள் தமிழ் நாட்டில் எத்தனை உள்ளன ?

(இ) எந்த எந்த ஊரில் இந்த நிலையங்கள் உள்ளன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) 7 (கடலில் மீன்பிடி பயிற்சி நிலையங்கள்—6, உள் நாட்டு நீர் நிலைகளில் மீன்பிடி பயிற்சி நிலையம்—1.)

(இ) கடலில் மீன்பிடி பயிற்சி நிலையங்கள் கீழ்க்கண்ட இடங்களில் உள்ளன—

(1) அடையாறு.
(2) கடலூர்.
(3) நாகபட்டினம்.
(4) மண்டபம்.
(5) தூத்துக்குடி.
(6) குளச்சல்.

உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் பிடி பயிற்சி நிலையம் மேட்டூர் அணையில் உள்ளது.

திரு. ந. தருமலிங்கம் : தஞ்சை மாவட்டத்தில், கோடிக்கரை, அதிராம் பட்டி முத்துப்பேட்டை போன்ற இடங்களில் மீன் பிடிக்கும் பயிற்சி நிலையத்தை ஏற்படுத்த வேண்டும் என்று செயற்குறிப்பு அரசுக்கு வந்தி ருக்கிறதா, அதற்கான ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படியிருந்தால், அது பரிசீலிக்கப்படும்.

திரு. கே. பி. எஸ். மணி : இந்த நிலையங்களில் பயிற்சி பெற்ற மாண வர்களுக்கு எவ்வளவு நாட்களுக்குள்ளே மீன் பிடிக்க படகு கொடுக்க உத்தேசம், எத்தனை கொடுக்கப்படுகிறது, தேவை எத்தனை, அரசாங்கத் தில் ஸ்டாக் எத்தனை இருக்கிறது என்று சொல்லமுடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. ந. வீராசாமி : தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு பயிற்சி நிலையங்கள் ஏழு என்று அமைச்சர் தெரிவித்தார்கள். இந்தப் பயிற்சி நிலையங்களை ஒட்டி மீன் பதனிடும் தொழிற்சாலையும் ஏற்படுத்த எதாவது செயற்குறிப்பு உண்டா ?

(பதில் இல்லை.)

திரு. என். துரைபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சி நிலையங்களில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, மற்ற இனத் தவர்களைப் பயிற்சிக்கு மறுக்கப்படுகிருர்கள் என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அது சரியானதல்ல.